‘மேம்பாலங்களின் நகரம்’ என சென்னை அழைக்கப்படுவதற்கு வித்திட்ட மேம்பாலம்!

தமிழ்நாட்டின் அடையாளமான ‘அண்ணா மேம்பாலத்திற்கு’ வயது 50!

‘இந்து தமிழ்திசை’ சிறப்புக் கட்டுரை!

ஜூலை 1 - அண்ணா மேம்பாலம் திறக்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவையொட்டி 30.06.2023 ‘இந்து தமிழ் திசை’ நாளேட்டில் சு.அருண் பிரசாத் எழுதியுள்ள கட்டுரை வருமாறு:

இருபதாம் நூற்றாண்டின் மத்தியில், சென்னையில் நிலவிய போக்குவரத்து நெரிசலால் மிகுந்த மனஉளைச்சலுக்கு உள்ளானவர்களில் ஒருவர், புதுமைப்பித்தன். ‘சாடி மோதித் தள்ளிக்கொண்டு நடமாடும் ஜனக் கூட்டத்துடன், ஓடி ஓய்ந்த ‘டிராம்’ உள்ளிட்ட வாகனங்களால் ஏற்பட்ட நெருக்கடி குறித்துப் பல இடங்களில் வெதும்பும் அவர், ‘மகாமசானம்’ (1941) கதையில், விரக்தியின் உச்சத்துக்கே சென்றுவிடுகிறார்: ‘சாயந்தரமாகிவிட்டால், நாகரிகம் என்பது இடித்துக்கொண்டும் இடிபட்டுக்கொண்டும் போக வேண்டிய ரஸ்தா என்பதைக் காட்டும்படியாகப் பட்டணம் மாறிவிடுகிறது. அதிலும் தேகத்தின் நரம்பு முடிச்சுப் போல், நாலைந்து பெரிய ரஸ்தாக்களும், டிராம் போகும் ரஸ்தாக்களும் சந்திக்கும் இடமாகிவிட்டாலோ தொந்தரவு சகிக்கவே முடியாது.’

1941இல், 7.77 லட்சமாக இருந்த சென்னையின் மக்கள்தொகை, பத்தே ஆண்டுகளில் (1951), சுமார் 14 லட்சத்தைத் தொட்டது. வாகனங்களின் எண்ணிக்கையிலும் இது எதிரொலித்தது. ‘இவ்வளவு மனிதர்களும் வாகனங் களும் எங்குதான் செல்கிறார்கள் ? என்னதான் செய்கிறார்கள்? நிறையத்தான் செய்ய வேண்டும். இன்றைய நாட்டு வாழ்க்கையின் சமநிலையும் முன்னேற் றமும் இந்தப் போக்குவரத்து நிகழும் விதத்தில்தான் கட்டுண்டிருக்கின்றன’ என சென்னையின்போக்குவரத்தைக் கண்டு அசோகமித்திரன் வியக்கிறார்.

சென்னையில் போக்குவரத்து நெரிசலை ஒழுங்குபடுத்த, 1949 காலகட்டத்தில் மவுண்ட் ரோடு, பூந்தமல்லி நெடுஞ்சாலை என இரண்டு இடங்களில் மேம்பாலங்கள் கட்டுவதற்குச் சென்னை மாநகராட்சி முன்மொழிந்தது. ஆனால், அது செயல்வடிவம் பெறவில்லை. அதன் பிறகு 1965இல், மவுண்ட் ரோட்டில் கதீட்ரல் சாலையும் நுங்கம்பாக்கம் சாலையும் சந்திக்கும் ஜெமினி சர்க்கிளில் மேம்பாலம் ஒன்று மீண்டும் முன்மொழியப்பட்டது.

1971இல் சென்னையின் மக்கள்தொகை 24 லட்சத்தைக் கடந்தது; மக்கள் தொகைப் பெருக்கத்தின் நேரடி விளைவுகளுள் ஒன்றாக வாகனங்களின் எண்ணிக்கையும் சரமாரியாக உயர்ந்து வந்ததால் சாலைப் போக்குவரத்தில் நெருக்கடி கூடியது. அண்ணாவின் பெயரால் அழைக்கப்படத் தொடங்கிய, சென்னையின் முதன்மை அடையாளமும் முதன்மைச் சாலையுமான மவுண்ட் ரோடு, வாகனங்களால் நிரம்பத் தொடங்கியது.

அண்ணா சாலையின் மையப் பகுதியான நுங்கம்பாக்கத்தில், அண்ணா சாலை நுங்கம்பாக்கம் சாலை (உத்தமர் காந்தி சாலை) (கதீட்ரல் சாலை) ராதாகிருஷ்ணன் • சாலை ஜி.என். செட்டி சாலை ஆகியவை சந்திக்கும் புள்ளியான ஜெமினி சர்க்கிளை, 1970இல் நாளொன்றில் 12,000 வாகனங்கள் கடந்து சென்றதாகப் புள்ளிவிவரம் ஒன்று கூறுகிறது. ‘பீக் ஹவர்’ நேரத்தில் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவது மிகப் பெரிய சவாலாக உருவெடுத்தது.

இந்தப் பின்னணியில்தான், அண்ணா சாலை ஜெமினி சந்திப்பில், ரூ.66 லட்சம் மதிப்பீட்டிலான மேம்பாலம் ஒன்று, மாநில நெடுஞ்சாலைத் துறையால் கட்டப்படும் என 1969இல் தமிழ்நாடு அரசு அறிவித்தது.

அண்ணாவின் மறைவுக்குப் பிறகு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற மு.கருணாநிதி அடிக்கல் நாட்ட, 1971 செப்டம்பர் 1 அன்று மேம்பாலத்தின் கட்டுமானப் பணிகள் தொடங்கின. 1,500 டன் எஃகு (Steel), 3,500 டன் சிமெண்ட் கொண்டு கட்டப்பட்ட இந்தப் பாலம், தரம் பிரிப்பான் (Grade separator) என்கிற அமைப்பில், தென் கிழக்கு ஆசியாவில் அமைந்த முதல் சாலை மேம்பாலம் ஆகும். மும்பையில் கெம்ஸ் கார்னர், மரைன் டிரைவ் ஆகிய இடங்களில் அமைந்த மேம்பாலங்களைத் தொடர்ந்து இந்தியாவின் மூன்றாவது மேம்பாலமாக உருப்பெற்ற இது, கட்டப்பட்ட காலத்தில், இந்தியாவில் மிக நீளமான மேம்பாலமாகவும் விளங்கியது. சாலையின் மேற்பரப்பு வழுக்காமல்

இருப்பதற்காக Insulation mastic என்கிற தொழில்நுட்பம் படுத்தப்பட்ட முதல் மேம்பாலம் தென்னிந்தியாவில் இதுதான். குறுக்கிடா மாற்றுப்பாதை அமைப்பு (Cloverleaf inter change) மூலம், அனைத்துச் சந்திப்புகளிலிருந்து வரும் வாகனங்கள் தடையின்றி முன்னேற இந்த மேம்பாலம் வழி செய்கிறது.

சென்னை மட்டுமின்றி, தமிழ்நாட்டின் அடையாளங்களில் ஒன்றாகவும் பிற்காலத்தில் மாறவிருந்த இந்த மேம்பாலத்தின் உருவாக்கத்தைக் கிட்டத்தட்ட ஒரு கதாபாத்திரத்தின் முக்கியத்துவத்துடன் தொடக்கம் முதல் இறுதிவரை தன்னுடைய ‘ஆகாயத் தாமரை’ நாவலில் அசோகமித்திரன் பதிவு செய்துள்ளார். மேம்பாலம் உருவாகிக்கொண்டிருந்த விதம் பற்றித் தனக்கே உரிய நடையில் அவர் இப்படி எழுதுகிறார்: ‘ஜெமினி மேம்பாலக் கட்டிட வேலை ஜரூராக நடந்து கொண்டிருந்தது. அவ்விடத்தில் சாலையைப் பாதிக்குமேல் பெரும் பள்ளங்களும் பெரிய சிமெண்ட் காங்கிரீட் உத்தரங்களும் நூற்றுக்கணக்கான கட்டிடப் பணியாட்களும் அடைத்துக் கொண்டிருந்தார்கள். மீதமிருந்த சிறு இடத்தைப் போலீசார் அடைத்துக் கொண்டிருந்தார்கள். காரோட்டுபவர்கள், பேருந்து ஓட்டுபவர்கள், சைக்கிள் ஓட்டுபவர்கள், நடந்து செல்பவர்கள் எல்லாரும் பேர்லீசாரின் கவனத்தைச் சரிசமமாகப் பெற்றார்கள். அந்த ஒரு பர்லாங்கு தூரத்தை ஒரு மாதிரித் தாண்டிய பிறகு அப்பாடா என்று பெருமூச்சு விட்டார்கள்.

இந்த மேம்பாலம் 21 மாதங்களில் கட்டி முடிக்கப்பட்டது!

‘சென்னை மாநகருக்குப் புதிய எழிலூட்டும் வகையிலும், போக்குவரத்து வசதிக்கான வாய்ப்பைப் பெருக்கும் வகையிலும், நெரிசலைத் தவிர்க்கும் வகையிலும்’ உருவான இந்த மேம்பாலத்தை 1973 ஜூலை 1 அன்று முதலமைச்சர் மு.கருணாநிதி திறந்து வைத்தார்; அதற்கு ‘அண்ணா மேம்பாலம்’ எனப் பெயர்சூட்டிய அவர், ‘அண்ணா அவர்களுடைய பெயரை வைத்த பிறகு, அதை ஏன் வைக்க வேண்டும் என்று கேள்வி கேட்கிற யாரும் தமிழகத்தில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை’ என்று பேசினார்.

அண்ணா உட்கார்ந்து புத்தகம் வாசிப்பதைப் போன்ற சிலையுடன் மேம்பாலத்தின் தொடக்க நாள் அடிக்கல் ஒன்று மேம்பாலத்தின் தூணில் ஒன்றில் நிறுவப்பட்டது. பெரியாரின் மறைவுக்குப் பிறகு, 1974இல் அவரது பிறந்தநாளின்போது மேம்பாலப் பரப்புக்குள் அவரது சிலையை நிறுவ அதிமுக விரும்பியது. இதற்கு அனுமதியளித்ததற்காக முதலமைச்சர் கருணாநிதிக்கு, அக்கட்சியின் பொதுச் செயலாளரான எம்.ஜி. ராமச்சந்திரன் நன்றி தெரிவித்திருந்தார்.

சென்னையில் குதிரைப் பந்தயம் தடைசெய்யப்பட்டதை நினைவுகூரும் விதமாக, குதிரையை அடக்கும் வீரனின் சிலைகள் மேம்பாலத்தின் மையத்துக்குக் கீழே வட்டச் சுற்றுவட்டத்தின் இரண்டு பக்கங்களிலும் 1974இல் நிறுவப்பட்டன. அன்று பிரபலமாக விளங்கிய ‘ஜெமினி ஸ்டுடியோ’வின் (1976இல் மூடப்பட்டது) பெயரால், அந்தச் சந்திப்பு ‘ஜெமினி சர்க்கிள்’ என வழங்கப்பட்டது. அந்த இடத்தில் எழுந்த இந்த மேம்பாலமும், அதன் கட்டுமானக் காலம் தொடங்கி இன்று வரை ‘ஜெமினி பிரிட்ஜ்’ என்று பரவலாக வழங்கப்படுகிறது.

‘மேம்பாலங்களின் நகரம்’ என சென்னை அழைக்கப்படுகிறது; அதற்கு விதை இந்த அண்ணா மேம்பாலம்தான். 50 ஆண்டுகளைக் கடந்து கட்டுறுதி குலையாமல் நிற்கும் இந்த மேம்பாலச் சந்திப்பை இன்று 3 லட்சத்துக்கும் அதிகமான வாகனங்கள் நாள்தோறும் கடந்துசெல்வதாகப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன .50ஆம் ஆண்டினைச் சிறப்பிக்கும் வகையில், ரூ.8.85 கோடி மதிப்பீட்டில் தற்போது நடைபெற்றுவரும் சீரமைப்புப் பணிகள், விரைவில் நிறைவடைந்து மேம்பாலம் புதுப் பொலிவு பெறவிருக்கிறது.

‘ஜெமினி மேம்பாலமும் கட்டி முடித்தாயிற்று. நீங்கள் அவசியம் சென்னைக்கு விஜயம் செய்து, ஒருமுறை ஊரை நன்கு சுற்றிப் பார்க்க வேண்டும்’ என ‘ஆகாயத் தாமரை’ நாவலின் முடிவில் அசோகமித்திரன் அழைப்பு விடுப்பார். நானும் அவ்வாறே அழைக்கிறேன் புதுப் பொலிவுபெறும் ‘அண்ணா மேம்பால’த்தை நீங்கள் ஒருமுறை வந்து பார்க்கத்தான் வேண்டும்!

ஜூலை 1: அண்ணா மேம்பாலம் திறக்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவு

நன்றி : ‘ இந்து தமிழ் திசை’

திருவண்ணாமலை நகராட்சி காந்தி நகர் பைபாஸ் சாலையில் உள்ள மைதானத்தில், அம்மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களுக்கு பரம்பரை முறைவழி சாரா அறங்காவலர் நியமன ஆணைகளை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (29.06.2023) வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.முருகேஷ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி (செங்கம்), எஸ்.அம்பேத்குமார் (வந்தவாசி), பெ.சு.தி.சரவணன் (கலசபாக்கம்), ஒ.ஜோதி (செய்யார்), மாநில தடகள சங்க துணை தலைவர் மரு. எ.வ.வே. கம்பன், இயக்குநர், செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை எம்.எஸ்.தரணிவேந்தன், இந்து சமய அறநிலையத்துறை மண்டல இணை ஆணையர் அர.சுதர்சன், இந்து சமய அறநிலையத்தறை மாவட்ட அறங்காவலர் நியமனக் குழுத்தலைவர் கே.வி.சேகரன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திருமதி. பார்வதி சீனிவாசன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

திருவண்ணாமலை மாவட்டத்தில்

அக்டோபர் 17 முதல் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கலாம்!

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!

திருவண்ணாமலை, ஜூலை 1

அக்டோபர் 17 முதல், நவம்பர் 30ஆம் தேதி வரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, நீக்க, திருத்தம் செய்யலாம் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. கழக தோழர்கள் இதனை பயன்படுத்தி, புதிய வாக்காளர்கள் சேர்த்தல், நீக்கல், திருத்தம் செய்திட வேண்டுமென, பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான எ.வ.வேலு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்..

01.01.2024 ஐ தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தத்தினை இந்திய தேர்தல் ஆணையம் கீழ்காணும் அட்டவணையின்படி அறிவித்துள்ளது. அதன்படி..

வாக்குச்சாவடி நிலைய அலுவலர் 21.07.2023 முதல் 21.08.2023 வரை வீடு வீடாக வந்து வாக்காளர் பட்டியலை சரிப்பார்பார்.

வாக்குச்சாவடிகளை திருத்தியமைத்தல் மற்றும் மறுசீரமைத்தல், வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள முரண்பாடுகளை நீக்குதல், வாக்காளர் பட்டியலில் உள்ள மங்கலான, மோசமான, தரமற்ற படங்களை மாற்றி நல்ல தரமான புகைப்படங்களை 22.08.2023 முதல் 29.09.2023 வரை செய்யப்படும்.

இதைத்தொடர்ந்து ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் 17.10.2023 அன்று வெளியிடப்படும்.

17.10.2023 முதல் 30.11.2023 வரை வாக்காளர்பட்டியலில் பெயர் சேர்ப்பது, நீக்கம், திருத்தம் செய்ய விண்ணப்பங்கள் பெறப்படும். இந்த விண்ணப்பங்களை அலுவலக வேலைநாட்களில் வாக்குச்சாவடி நிலைய அலுவலர் அல்லது வாக்காளர் பதிவு அதிகாரி, உதவி வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகங்களில் அளிக்கலாம். சிறப்பு முகாம் குறித்த தகவல் பின்னர் தெரிவிக்கப்படும்.

புதிதாக பெயர் சேர்க்க, நீக்கம் செய்ய விண்ணப்பம் அளித்தவர்களை, புதிய வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் பணி 26.12.2023க்குள் முடிவடையும்.

இதைத் தொடர்ந்து 05.01.2024அன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்.

வாக்காளர் பட்டியலில் புதியதாக பெயர் சேர்க்க 18 முதல் 25க்கு கீழ் உள்ள மனுதாரர்கள் வயது சான்றிதழை அளிக்க வேண்டியது கட்டாயம். www.voters.eci.gov.in https://voterportal.eci.gov.in ஆகிய இணையதள முகவரி மற்றும் ‘வாக்காளர் உதவி கைபேசி செயலி’ ஆகியவற்றின் மூலம் ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

01.01.2024, 01.04.2024, 01.07.2024 மற்றும் 01.10.2024 ஆகிய தேதிகளில் 18 வயது பூர்த்தியடைபவர்களும், வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்களும், பெயர் சேர்க்க படிவம் 6ல் விண்ணப்பிக்கலாம்.

எனவே மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் விரைந்து இப்பணியினை முடித்திட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா! சிவகங்கை மாவட்ட மகளிரணி - மகளிர் தொண்டரணி சார்பில்

காரைக்குடியில் இன்று பொதுக்கூட்டம்!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் - மு.தென்னவன் - தமிழரசி எம்.எல்.ஏ. - எழிலரசி - புவியரசி சிறப்புரை!

சிவகங்கை, ஜூலை 1-

சிவகங்கை மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா வினை முன்னிட்டு பொதுக்கூட்டங்கள் ஒவ்வொரு அணிகளின் சார்பில்நடத்தப்பட்டு வருகிறது.

இதில் சிவகங்கை மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, சார்பில் இன்று (1.7.2023 - சனிக்கிழமை) காரைக் குடியில் ஐந்து விளக்கு திடலில் மாலை 5 மணி அளவில் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் தலைமையில் நகர் மன்ற தலைவர் செ.முத்துதுரை நகர் கழகச் செயலாளர் நா.குணசேகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில் வரவேற்றுப் பேசுகிறார்.

பொதுக் கூட்டத்தில் மாவட்ட கழகச் செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர். பெரிய கருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் , திருமதி தமிழரசி எம்.எல்.ஏ. தலைமைக் கழக பேச்சாளர்கள் முனைவர் எழிலரசி, குடியாத்தம் புவியரசி ஆகியோர் சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

விழாவில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது .

விழா ஏற்பாடுகளை மாவட்ட மகளிர் அணி தொண்டர் அணி நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.

சிவகங்கை மாவட்டம்

திருப்பத்தூரில் - முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்!

கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை! மு.தென்னவன் - ராஜீவ்காந்தி - தமிழரசி சிறப்புரை!

சிவகங்கை, ஜூலை 1-

சிவகங்கை மாவட்ட ம் திருப்பத்தூரில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் அண்ணா அரங்கில் மாவட்டகழக செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளரும் மாநில மாணவரணி தலைவருமான ராஜீவ் காந்தி, முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ.ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

முன்னதாக மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார் வரவேற்றுப் பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் அ.கணேசன், மாவட்ட துணை செயலாளர்கள் த. சேங்கைமாறன், திருமதி ஜோன்ஸ் ருசோ கே.எஸ்.எம்.மணிமுத்து, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், முன்னாள் எம்.எல்.ஏ.மாரியப்பன் கென்னடி, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன் ஆகியோர் பேசினார்கள். கூட்டத்தில் ஒன்றிய செயலாளர்கள் எஸ்.சண்முகவடிவேல், கே.பாலசுப்பிரமணியன் குன்னக்குடி சுப்ரமணியன், பூமிநாதன், பேரூராட்சி மன்ற தலைவர்கள் திருமதி கோகிலராணி நாராயணன் அம்பலமுத்து முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன் மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன், பேரூர் கழக செயலாளர் ஆர்.கார்த்திகேயன் மாணவரணி துணை அமைப்பாளர்கள் செந்தில் குமார் சோமசுந்தரம் சன்சீமான் சுப் பையா , அசோக் , ராஜ அமுதன், பிரதீப், ஆனந்தகுமார், சந்திரசேகர், உட்பட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

கூட்டத்தில் 1500 பேர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன், மு.தென்னவன் ஆகியோர் வழங்கினார்கள்.

நகர மாணவரணி அமைப்பாளர் அபுதாகீர் நன்றி கூறினார்.

பொதுக்கூட்ட ஏற்பாடுகளை மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் தலைமையில் மாணவரணி நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.

புழல் மத்திய சிறையில் சிறைவாசிகளுக்கான கணினி பயிற்சி மையத்தை சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார். உடன் சிறைத்துறை டி.ஜி.பி. அமரேஷ் புஜாரி, மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ. உள்ளார்.

மணிப்பூரில்

ஜூலை 8 வரை பள்ளிகளை மூட உத்தரவு!

இம்பால்,ஜூலை.1-

மணிப்பூரில் ஜூலை 8 வரை பள்ளிகளை மூட அம்மாநில கல்வித்துறை இயக்குநர் உத்தரவிட்டுள்ளார்.

மணிப்பூர் முதல்வர் ராஜிநாமா செய்ய வேண்டும் என எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. இந்த நிலையில் மணிப்பூரில் ஜூலை 8 வரை பள்ளிகளை மூட அம்மாநில கல்வித்துறை இயக்குநர் இன்று உத்தரவிட்டுள்ளார்.

மாநிலத்தில் அசாதாரண சூழல் நிலவும் நிலையில் பள்ளிகளை மூட உத்தரவிடப்பட்டுள்ளது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எஸ். கலைச்செல்வன்

ஜூலை 1 (2018)

இளம்வயதிலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, தீவிர கழகக் பணியாற்றியவர்.

தேனி மாவட்டம், காக்கில் சிக்கையன்பட்டி கிளைச் செயலாளர், ஒன்றிய துணைச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, கம்பம் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.